# அண்டை வீட்டார் நட்பு

"ஊரோடு ஒத்து வாழ்" என நமது முன்னோர்கள் கூறினார்கள். நமது முன்னோர்கள் கூறிய ஒவ்வொரு பொன்மொழியிலும் வாழ்க்கைக்குத் தேவையானவை அடங்கியுள்ளன. ஊரோடு ஒத்து வாழ்வதென்றால், சமுதாயத்துடன் ஒத்துப்போவது, ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்துப் போவது, வேற்றுமைகளைப் பொருட்படுத்தாமல் ஒற்றுமையுடன் வாழ்வது என்பதாகும். 'நான் இவற்றையெல்லாம் எவ்வாறு செய்வது?' எனப் பலர் யோசிக்கலாம். ஆனால் நாம் சுலபமாக நமது அண்டை வீட்டாருடன் ஒற்றுமையாக இருக்கலாம் அல்லவா?

உதாரணத்திற்கு, ஓர் அடுக்குமாடிக் குடியிருப்பின் ஒரு குறிப்பிட்ட மாடியில் உள்ள அனைத்து வீடுகளிலும் சீனர்கள் மட்டுமோ இந்தியர்கள் மட்டுமோ மலாய்க்காரர்கள் மட்டுமோ வசிப்பது இல்லை, அனைவரும் கலந்துதான் இருக்கிறார்கள். பொதுவாக, மக்களுக்குத் தமது இனத்தாருடன் பழகுவது எளிது. ஆனால் பிற இனத்தவர் என்றால் பழகுவதற்குச் சிறிது தயக்கமாகத்தான் இருக்கும். ஏனெனில், அவர்கள் பழக்கவழக்கங்களில் நம்மைப் போன்றவர்கள் அல்லர், பல வேறுபாடுகளைக் கொண்டவர்கள். ஆனால், அந்த வேற்றுமைகள் அனைத்தையும் நாம் கடந்துவர வேண்டும்.

சிறு சிறு விஷயங்கள்தான் நமது ஒற்றுமையை வலுப்படுத்தும். எனவே தினமும் காலை, நமது அண்டை வீட்டார் நமது வீட்டு வாசலைக் கடந்து செல்லும்போது, அவர்களுக்கு வணக்கம் கூறுவது அல்லது அவர்களைப் பார்த்து ஒரு புன்சிரிப்பு அல்லது கை அசைத்தல் போன்றவற்றைச் செய்யலாம்.

திடீரென்று ஒரு நாள் உங்களது அண்டை வீட்டார்கள் சோகமாக வாடியமுகத்துடன் செல்ல நேர்ந்தால் நீங்கள் உதிர்க்கும் புன்சிரிப்பு அவர்கள் துன்பத்தைப் பறக்கச் செய்யும். உங்கள் அண்டை வீட்டுக்காரர்கள் உடல்நலக் குறைவாக இருக்கையில் நீங்கள் வழிபடும் போது அவர்களுக்காகவும் பிரார்த்தனை செய்யலாம். மேலும், முடிந்தால் அவர்களுக்கு ஒரு சில பழங்களை வாங்கித் தரலாம். பண்டிகைக் காலம்வரும் போது, நீங்கள் அவர்களை உங்கள் வீட்டிற்கு அழைக்கலாம். மேலும் நீங்கள் செய்த பலகாரங்களையும், அவர்களுக்குக் கொடுக்கலாம். உங்கள் அண்டை வீட்டுக்காரர்கள் வெளியூருக்குச் சென்றிருந்தால், அவர்கள் வீட்டிற்கு வெளியே வளர்க்கும் செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றலாம். அந்தச் செடிகள் வாடாமல் இருக்க அது உதவும். ஒற்றுமை என்பதன் முதல்படி கருத்துப் பரிமாற்றத்தில்தான் தொடங்குகிறது. ஆகையால் வாரந்தோறும் அல்லது மாதந்தோறும் அண்டை வீட்டாரின் குடும்பத்துடன் இரண்டு மணிநேரமாவது கலந்துரையாடி மகிழலாம். அவர்களுடன் பேசி அவர்களைப் பற்றியும் அவர்களது குடும்பத்தைப் பற்றியும் அறிந்து கொள்ளலாம். இவற்றையெல்லாம் செய்வதால் என்ன பயன் ஏற்படும்? எனப் பலரும் சிந்திக்கலாம்.

சிங்கப்பூர் இன நல்லிணக்கத்தைப் போற்றும் நாடு. இதற்காகவே தனியாக இன நல்லிணக்க நாள் கொண்டாடப்படுகின்றது. ஒருவருக்கொருவர் மற்றவரது கலாச்சாரத்தைப் பற்றி அறிந்துகொள்ள அண்டை வீட்டாருடன் பழகுவது நல்ல வாய்ப்பாகும். எல்லா மக்களுக்கும் இடையே ஏதோ ஒருவகையில் ஒற்றுமை காணப்படும். இந்தியர்கள் எவற்றையெல்லாம் செய்யமாட்டார்கள், எவற்றையெல்லாம் செய்வார்கள், மலாய்க்காரர்கள் எந்தப் பழக்கங்களையெல்லாம் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள், எந்தப் பழக்கங்களையெல்லாம் ஏற்றுக்கொள்வார்கள். சீனர்கள் எந்த உணவையெல்லாம் உண்ண

மாட்டார்கள், எந்த உணவையெல்லாம் உண்பார்கள் போன்ற தகவல்களை அறிந்து கொள்ள இயலும். மேலும், ஒரு சீனருடைய திருமணவீட்டிற்குச் செல்லும்போது எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பதையும் தெரிந்துகொள்ளலாம். இதன் மூலம் மக்களிடையே ஒற்றுமை வளரும், கலவரம் வெடிக்காது. அக்காலத்தில் மக்களிடையே ஒற்றுமை இல்லாத காரணத்தால் நமது முன்னோர்கள் அனைவரும் கலவரங்கள், போர்கள், போன்றவற்றில் ஈடுபட்டு நிறைய துன்பப்பட்டுவிட்டார்கள். ஆகவேதான் நமது முன்னாள் பிரதமர் திரு.லீ குவான் யூ அவர்கள் அரும்பாடுபட்டு நமது நாடு நல்லிணக்கம் நிறைந்த நாடாகத் திகழச் செய்துள்ளார். அந்தப் பெயரைக் காப்பாற்ற வேண்டியது சிங்கப்பூர் குடிமக்களாகிய நம்முடைய பொறுப்பு ஆகும்.

அந்தப் பொறுப்பை முதலில் நாம் நிறைவேற்ற வேண்டும். அதன்பிறகு அந்தப் பொறுப்பு நமது அடுத்த தலைமுறையைச் சென்றடையும். எனவே நமது அண்டை வீட்டாருடன் ஒற்றுமையாக இருப்போம், சிங்கப்பூரின் பெயரைக் காப்பாற்றுவோம்.

**வர்ஷினி**

**உயர்தமிழ்**

**உயர்நிலை 3**

## சுற்றுப்புறத் தூய்மை

சுற்றுப்புறம் என்றால் என்ன? நாம் ஏன் சுற்றுப்புறத்தைத் தூய்மையாக வைத்திருக்க வேண்டும்? அதன் முக்கியத்துவம் மற்றும் பயன்கள் யாவை? போன்ற நிறைய வினாக்கள் நமக்குள்ளேயே ஓடிக் கொண்டிருக்கும். சுற்றுப்புறம் என்றால் நம்மைச் சுற்றியுள்ள அல்லது நம் வாழும் நாட்டினுள் இருக்கும் இடத்தைக் குறிக்கிறது. அதை ஏன் தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்பதைப் பற்றியும் அதன் பயன்களைப் பற்றியும் அடுத்து வரும் பத்திகளில் கூறுகிறேன்.

நாம், நம் சுற்றுப்புறத்தை எவ்வாறு தூய்மையாக வைத்திருக்க வேண்டும் என்பதற்குச் சில வழிகள் உள்ளன. அதற்கு முக்கியமாகத் தேவைப்படும் வழிகளைப் பற்றி நான் விளக்குகிறேன். குப்பைகள் ஏதாவது தரையில் கிடந்தால் அதை நாமே எடுத்து அப்பக்கத்தில் உள்ள குப்பைத் தொட்டியில் போட வேண்டும். இல்லையென்றால் அது அதே இடத்தில் வெகுநாட்களாகக் கிடந்து துர்நாற்றம் அடிக்கத் தொடங்கிவிடும். நாம், துப்புரவுத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள் என்று அலட்சியமாக அங்கேயே குப்பை கிடக்கட்டும் என்று சென்றுவிடக்கூடாது. துப்புரவுத் தொழிலாளிகளும் மனிதர்கள்தானே! ஆகவே, மிக முக்கியமாக நாம் குப்பை போடுவதைத் தவிர்க்க வேண்டும். நாட்டைச் சுத்தமாக வைத்திருப்பது எப்பொழுதுமே நம் கையில்தான் இருக்கிறது. நம் நாட்டைச் சுத்தமாக வைத்திருக்க நாம் உதவவில்லையென்றால் யார் உதவுவார்? ‘முயற்சி தோற்கலாம், முயற்சிகள் தோற்கா’ என்ற பொன் மொழிக்கு ஏற்ப ஒருவரின் முயற்சியால் மட்டும் ஒரு நாடு தூய்மையாகாது, அனைவரின் முயற்சியும் ஒத்துழைப்பும் அதற்குத் தேவை. நாம் குப்பை போடத் தொடங்கினால் சிறுவர்களும் நம்மையே முன்னுதாரணமாகக் கொண்டு தொடருவார்கள். குப்பையை அதற்குரிய இடத்தில் மட்டுமே போட வேண்டும் என்பது என் கருத்து ஆகும்.

நாம் குழுவாகச் செயல்பட்டுக் குப்பைகளைத் தெருவில் போடக்கூடாது என்பது பற்றிய விழிப்புணர்வை உருவாக்க வேண்டும். மேலும், குப்பைகளைத் தெருவில் போட்டால் ஏற்படும் விளைவுகள் யாவை என்று ஒரு தகவல் பலகையைத் தயாரிக்கலாம். பிறகு அதைக் குப்பைதொட்டிக்குப் பக்கத்தில் வைக்கலாம். அப்பொழுதுதான் குப்பையைப் போடுபவர்கள் தங்கள் தவற்றை உணர்ந்து, தங்களைத் திருத்திக்கொள்ள முடியும்.

தூய்மையான சுற்றுப்புறத்தின் அவசியம் ஒன்றல்ல இரண்டல்ல நிறையவே இருக்கின்றன. அதில் முக்கியமானவற்றை இப்பொழுது உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். ஒரு நாடு தூய்மையாகக் காட்சி தந்தால்தான் வெளிநாட்டிலிருந்து மக்கள் இங்குவர ஆசைப்படுவார்கள். இதனால், அந்த நாட்டின் வருமானம் கூடும். அது கூடினால் அந்த நாட்டில் பல வசதிகளை ஏற்படுத்த செலவு செய்ய முடியும். மக்கள் அவர்களின் நேரத்தை மகிழ்ச்சியாகக் கழிக்க முடியும்.

மக்கள் குப்பைகளைத் தெருவில் போடவில்லை என்றால், துப்புரவாளர்கள் நிறைய பேரை வேலைக்குச் சேர்த்துக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. இதனால் வெளிநாட்டிலிருந்து துப்புரவாளர்களை வரவழைப்பதில் நிறைய பணத்தைப் பயன்படுத்த வேண்டிய தேவை இருக்காது. அதனால், அந்தப் பணத்தை அரசாங்கம் சேமித்து வேறு சில வழிகளில் நாட்டை முன்னேற வைப்பதில் கவனம் செலுத்திச் சாதனை புரியலாம்.

பசுமையான நாடே தூய்மையான நாடு என்று அழைக்கப்படுகிறது. அதற்கு நம் சிங்கை நாடு சிறந்த உதாரணமாகும். அது பசுமையான நாடு என்ற பெயரை எப்படிப்

பெற்றது என்று தெரியுமா? அதற்கு ஒருவரின் முயற்சி மட்டுமே காரணம் அல்ல. நாட்டிலுள்ள அனைவருமே எடுத்த பல முயற்சிகளின் விளைவாகும்.

ஒரு நாட்டைத் தூய்மையாகவும் பசுமையாகவும் வைத்துக்கொள்வதன் முக்கியத்துவத்தையும் அதற்கான வழிகளையும் பற்றி அறிந்துகொண்டோம். அதனால், சில முக்கியமான வழிமுறைகளை மனத்தில் வைத்துக்கொண்டு நம் நாட்டை மேலும் பசுமையானதாக ஆக்குவோம்.


**வைஷ்ணவி**

**உயர்தமிழ்**

**உயர்நிலை 3**

## நாம் கற்றுக்கொண்ட பாடம்

நான் பள்ளிக்கு அடிக்கடி தாமதமாகச் சென்றுள்ளேன். ஆனால், நான் சென்ற வாரம் தாமதமாகச் சென்றதை என்னால் மறக்கவே முடியாது. நான் தொடக்கப்பள்ளியில் படிக்கும்போது பலமுறை தாமதமாகச் சென்றுள்ளேன். ஆனால், சென்ற வாரம் முதல் முதலில் நான் உயர்நிலை பள்ளிக்குத் தாமதமாகச் சென்றேன். இச்சம்பவம் சென்ற வாரம் திங்கட்கிழமை நடைபெற்றது. அதற்கு முன்தினம் நான் என் கணிணியில் நீண்ட நேரம் விளையாடிவிட்டு இரவு ஒரு மணிக்குப் படுக்கச் சென்றதே காரணமாகும்.

அடுத்த நாள் காலையில் என்னால் எழ முடியவில்லை. நான் களைப்பாக இருந்ததால் மறுபடியும் தூங்கினேன். சிறிது நேரம் கழித்து என் தாயார் என்னை எழுப்பினார். எழுந்தவுடன் என் கைக் கடிகாரத்தைப் பார்த்தேன். ஏழு மணி என்று என் கைக்கடிகாரம் காட்டியதைக் கண்ட நான் அதிர்ச்சியில் சிலையாய் நின்றேன். சற்றும் தாமதிக்காமல் நான் என் காலைக் கடன்களில் ஈடுபட்டேன். பம்பரமாய்ச் சுழன்று என் காலைக் கடன்களை முடித்தேன். ஏழரை மணிக்கு வீட்டை விட்டு வெளியேறினேன், எட்டு மணிக்கு என் பள்ளி ஆரம்பித்தது. ஆனால், என் வீட்டில் இருந்து பள்ளிக்குச் செல்வதற்குச் சராசரியாக ஒரு மணி நேரம் ஆகும். மின்னல் வேகத்தில் நான் பேருந்து நிலையத்திற்குச் சென்றேன். நான் பள்ளிக்குக் காலதாமதமாகச் செல்வேனென்று எண்ணினேன். பதற்றத்துடன் என் பேருந்து வரும்வரை காத்திருந்தேன்.

ஏழு நாற்பத்தி ஐந்திற்கு என் பேருந்து வந்தது. ஆனால் அதோடு என் பிரச்சினை நின்றுவிடவில்லை. வேலைக்குச் செல்லும் நேரம் என்பதால் எங்கும் பரபரப்பாகவே இருந்தது. பேருந்து வேறு நிறுத்தங்களிலும் நின்று சென்றது. பேருந்தில் நான் மட்டும்தான் பள்ளிக்குச் செல்லும் சிறுமி. என் உயர்நிலைப்பள்ளிக்கு நான் இதுவரை காலதாமதமாகச் சென்றதில்லை. இதன் காரணமாக, என் ஆசிரியர் என்னை வகுப்புத் தலைவியாக நியமித்தார். அவரது நம்பிக்கையைக் காப்பாற்றவே நான் தினமும் பள்ளிக்கு நேரத்திற்குச் சென்றேன்.

எப்படியோ எட்டு இருபதிற்கு நான் இறங்க வேண்டிய இடம் வந்துவிட்டது. ஆனால், பேருந்து ஓட்டுனரோ யாரும் இறங்கப் போவதில்லை என்று எண்ணி அடுத்த பேருந்து நிறுத்தம் நோக்கிப் பேருந்தை ஓட்டினார். என் இதயம் துடிப்பதை என்னால் கேட்க முடிந்தது. பதற்றமாய் இருந்த என் மனநிலை மோசடைந்தது. அடுத்த பேருந்து நிலையம் மிகவும் தூரத்தில் இருந்தது. அங்கிருந்து பள்ளிக்கு நடந்து செல்வதற்கு இருபது நிமிடம் ஆகும். பேருந்திலிருந்து இறங்கியதும் சற்றும் தாமதிக்காமல் வேறு வழியின்றி என் பள்ளியை நோக்கி நான் நடந்தேன். வேகமாக நடந்ததால் என் கால்கள் பயங்கரமாக வலித்தன. மூச்சுவாங்கிக்கொண்டே பள்ளியின் பாதுகாவலரிடம் என் பெயரையும் நான் தாமதமாய் வந்ததன் காரணத்தையும் கூறினேன். என் கனமான பள்ளிப்பையினால் ஏற்பட்ட முதுகுவலியைத் தாங்கிக்கொண்டு பள்ளிக்குள் நுழைந்தேன்.

அனைவருக்கும் வகுப்பு நடைபெற்றுக்கொண்டிருந்ததால் எங்கும் நிசப்தம் நிலவியது. வகுப்பிற்குச் சென்று நான் என் வகுப்பாசிரியரிடம் மன்னிப்புக் கேட்டேன். நான் தாமதமாக வந்ததன் காரணத்தை அவரிடம் கூறினேன். ஒரு மணி நேரம் தாமதமாக வந்ததால் கற்றுக்கொள்ளவில்லை. தேர்வுக்குத் தேவையான பல தகவல்களை நான் இழந்துவிட்டேன். அதோடு என் ஆசிரியர் என் மீது வைத்திருந்த நம்பிக்கையை நான் உடைத்துவிட்டேன். ஒரு வகுப்பின் தலைவியாகிய நான் பள்ளிக்கு மிகத் தாமதமாகச் சென்றுவிட்டேன். என்

ஆசிரியர் என்னைக் கண்டித்தார். அதனால் நான், அவமானம் அடைந்தேன், வெட்கத்தில் தலை குனிந்தேன்.

நான் பள்ளிக்குத் தாமதமாகச் சென்றதோடு மட்டுமல்லாமல், அவசரத்தில் என் புத்தகங்களை வைத்திருக்கும் அலமாரியின் சாவியையும் எடுத்து வரவில்லை. இதனால், என்னால் என்னுடைய புத்தகங்கள் எதையும் எடுக்க முடியவில்லை. நான் நிறைய முக்கிய தகவல்களைப் பள்ளிக்குக் காலதாமதமாகச் சென்றதால் இழந்துவிட்டேன்.

பள்ளிக்குத் தாமதமாகச் சென்றதால் என் காலைச் சிற்றுண்டியையும் என்னால் உண்ண முடியவில்லை. என்னிடம் போதுமான அளவு காசு இல்லாததால் உணவகத்தில் வாங்கிச் சாப்பிடவும் முடியவில்லை. அன்று நான் எதையும் உட்கொள்ளாமல் இருந்தேன். ஒரு பள்ளி வகுப்புத் தலைவியாக இருந்துகொண்டு மற்றவர்களிடம் பணத்தை இரவல் வாங்குவது சரியல்ல என்று எண்ணி அப்படியே இருந்துவிட்டேன்.

பள்ளிக்குக் கால தாமதமாகச் செல்வதால் எனக்கு நிறைய சிரமங்களும் அதனால் துன்பங்களும் ஏற்பட்டன. பள்ளிக்கு நேரத்துடன் செல்வதன் முக்கியத்துவத்தை நான் அன்று அறிந்தேன். நான் இரவில் கணினி விளையாடியதால் ஏற்பட்ட விளைவுகளை உணர்ந்தேன். இச்சம்பவத்தின் மூலம் நான் நிறைய பாடம் கற்றுக்கொண்டேன். அன்றிலிருந்து நான் பள்ளிக்குத் தாமதமாய்ச் செல்லவில்லை. இச்சம்பவம் 'என் மனத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்திருக்கிறது.'

**நாச்சம்மை**

**உயர்தமிழ்**

**உயர்நிலை 3**

## தொலைக்காட்சி நிகழ்ச்சியின் பயன்கள்

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை நாம் ஏன் பார்க்கிறோம்? நாம் நம் நேரத்தைக் கழிப்பதற்காகவும், நாள் முழுவதும் வேலை செய்தபின் ஓய்வு நேரத்தை மகிழ்ச்சியாகக் கழிப்பதற்காகவும்தான் தொலைக்காட்சியைப் பார்க்கிறோம். நாம் நம் நேரத்தைச் சரியான முறையில் கழிக்கிறோமா என்பது நாம் காணும் நிகழ்ச்சிகளைப் பொருத்திருக்கிறது. மேலும், நாம் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பார்ப்பதில் அளவோடு இருக்க வேண்டும். ஏனென்றால், நாள் முழுவதும் தொலைக்காட்சியைப் பார்த்தால் நம் கண் பார்வை குறைந்துவிடும்.

நான் விரும்பிப் பார்க்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சியின் பெயர் ‘இராமாயணம்’ ஆகும். இராமாயணம் எல்லா இந்தியர்களுக்கும் தெரிந்த கதைதான். ஆனால், அந்த அற்புதமான இலக்கியத்தைப் புத்தகத்தில் படிக்காமல் தொலைக்காட்சியில் கண்டதால் என் கற்பனைத் திறன் வளர்ந்தது. மேலும் நிகழ்ச்சியில் இடம்பெறும் உரையாடலிலிருந்து தமிழ்ச் சொற்களைக் கற்றுக்கொள்ள வாய்ப்பாக இருந்தது. இராமாயணம் என்ற கதையை நன்கு புரிந்துகொள்ள முடிந்தது. இந்த நிகழ்ச்சி திங்கள் முதல் சனிக்கிழமை வரை மாலை ஏழு மணிக்கு ஒளிபரப்பப்படுகிறது. ஒவ்வொரு நாளும் நான் இதைத் தவறாமல் என் குடும்பத்தாருடன் பார்ப்பேன்.

முதலில் நான் இந்த நிகழ்ச்சியில் ஆர்வமே காட்டவில்லை. பின், என் அம்மா கதையின் சிறப்பைக் கூறிய அடுத்த கணமே ஆர்வம் உண்டானது. இராமாயணத்தில் வரும் அனைத்துக் கதாபாத்திரங்களும் நிகழ்வுகளும் மிகச் சுவாரசியமாக உள்ளன. இந்த நிகழ்ச்சி மூலம் நான் மொழிவளத்தைப் பெருக்கிக்கொண்டேன். உதாரணத்திற்கு வனம் என்றால் காடு. தமையன் என்றால் அண்ணன், நாமம் என்றால் பெயர் போன்ற பல சொற்களைக் கற்றுக்கொண்டேன். மேலும், அக்காலத்தில் முனிவர்களின் வாழ்க்கை முறையையும் மன்னர்களின் வாழ்க்கை முறையையும் பற்றித் தெரிந்துகொண்டேன். அதுமட்டுமல்லாமல் நாம், இக்கதையின்மூலம் அன்பு, நேர்மை, உதவும் மனப்பான்மை, அடக்கம், வீரம், நம்பிக்கை போன்ற பல பண்புகளையும் கற்றுக் கொள்ளலாம். இந்த நிகழ்ச்சி அடுத்தடுத்து என்ன நடக்கப்போகிறது என்று நம் ஆர்வத்தைத் தூண்டும்படியாக உள்ளது.

இத்தகைய நிகழ்ச்சிகளைப் பார்த்ததால் நான் நிறைய நன்மைகள் பெற்றேன். அதே சமயத்தில், நான் தொலைக்காட்சி பார்க்கும் நேரத்தை அளவோடு வைத்துக்கொள்வேன். ‘அளவிற்கு மீறினால் அமுதமும் நஞ்சு’ என்ற பழமொழிக்கேற்ப இராமாயணம் என்ற நிகழ்ச்சி எவ்வளவு நல்லதாக இருந்தாலும் தொலைக்காட்சியைப் பார்ப்பதற்கும் கால அளவிருக்கிறது.

இதுவே, நான் விரும்பிப் பார்த்த தொலைக்காட்சி நிகழ்ச்சியும் அதன் மூலம் நான் கற்றுக்கொண்ட படிப்பினைகளும் ஆகும்.

**சென்சியா**

**உயர்தமிழ்**

**உயர்நிலை 3**

# மறுபயனீட்டில் வெற்றி

‘திவ்யா நமது வகுப்புத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவருக்குக் கரவொலி எழுப்புங்கள்’ என எனது வகுப்பு ஆசிரியர் மாணவர்களிடம் அறிவித்தார். நான் மகிழ்ச்சிக்கடலில் மூழ்கினேன். என் பெயர்தான் திவ்யா. நான் உயர்நிலை ஒன்றில் படிக்கிறேன். வகுப்புத் தலைவராக இருக்க வேண்டும் என்பது எனது நீண்ட நாள் கனவு. அது இன்று நிறைவேறிவிட்டது. எனக்கு அது மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. நான் வகுப்பின் முன்னால் நின்று தலைவராகப் பொறுப்பேற்றுக்கொள்வதற்கான உறுதிமொழியைக் கூறிவிட்டு எனது நாற்காலியில் அமர்ந்தேன்.

வகுப்பு முடிந்ததும் ஆசிரியர் என்னைத் தனியாகக் கூப்பிட்டு, “திவ்யா, வகுப்புத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதற்கு எனது வாழ்த்துகள். உனக்கு நான் முதலில் கொடுக்கப்போகிற பொறுப்பு, மாணவர்களை மறுபயனீட்டில் ஈடுபட வைப்பதாகும். இது ஒரு சவால் நிறைந்த பணி என்பது எனக்குத் தெரியும். ஆனால், உன்னால் இதைச் சரியாகச் செய்ய முடியும் என நம்புகிறேன்,” எனச் சொன்னார். இந்த வேலையை நான் சிறப்பாகச் செய்ய வேண்டும் என முடிவெடுத்தேன். அடுத்த நாள், ஆசிரியர் வரும்முன் நான் வகுப்பின் முன் சென்று, “நண்பர்களே! உங்கள் எல்லோருக்கும் நான் ஒரு வேண்டுகோளை வைக்கிறேன். நாம் எல்லோரும் பழைய காகிதங்கள், கண்ணாடிகள் போன்றவற்றை மறுபயனீடு செய்து நமது வகுப்பை அலங்கரிக்க வேண்டும். இதுவே இப்போது நாம் எடுக்கவுள்ள புதிய முயற்சியாகும். இதற்கு நீங்கள் ஒத்துழைக்க வேண்டும்” என அறிவித்தேன். இதைக் கேட்ட சிலர் சிரித்தனர். மேலும் சிலர், என்னைக் கண்டுகொள்ளாமல் தங்களது சொந்த வேலைகளைச் செய்துகொண்டிருந்தனர். ஒரு கணம் என்ன செய்வதென்று தெரியாமல் தவித்தேன். இவர்களுக்கு எப்படிப் புரியவைப்பது? ஆசிரியர் என்னைப் பற்றி என்ன நினைப்பார்? எனப் பல கேள்விகள் எனது மனத்தில் உதித்தன. சட்டென்று ஒரு யோசனை எனது மூளையில் தோன்றியது.

நான் உடனே, “யாரெல்லாம் இந்த மறுபயனீட்டில் முயற்சி எடுத்து தங்களது பங்கை ஆற்றுகிறீர்களோ அவர்களுக்கு நட்சத்திர அறிவிப்புப் பலகையில் மேலும் இரண்டு நட்சத்திரங்கள் கிடைக்கும். இதைப் பற்றி நான் வகுப்பு ஆசிரியரிடம் எடுத்துக் கூறுவேன்” என்றேன். உடனே முழு வகுப்பும் ஆவலுடனும் உற்சாகத்துடனும் நான் சொல்வதைக் கேட்க ஆரம்பித்தது. இதற்குக் காரணம், ஒவ்வொரு மாதமும் யார் நட்சத்திரப் பலகையில் அதிக நட்சத்திரங்களைப் பெற்றிருக்கின்றாரோ அவருக்குப் பள்ளி பத்து வெள்ளியைப் பரிசாக வழங்கும் என்பதே காரணமாகும்.

உடனே, மாணவர்கள் அனைவரும் உற்சாகத்துடன் கலந்துரையாடத் தொடங்கினார்கள். அவர்களின் உற்சாகத்தினால் என்னால் எனது பணியைச் செவ்வனே தொடங்க முடிந்தது. முதலில், வகுப்பில் மறுபயனீட்டை மேம்படுத்துவதற்கு இரண்டு யோசனைகள் தேவைப்பட்டன. நான் மாணவர்களோடு கலந்துரையாடிய பிறகு, அனைவரும் சேர்ந்து அந்த இரண்டு யோசனைகளைத் தேர்ந்தெடுத்தோம். ஒன்று வகுப்பிலேயே இரண்டு மூன்று பெட்டிகளை வைத்து நெகிழி, காகிதத் தாள்கள் மற்றும் மறுபயனீடு செய்வதற்குத் தகுந்த வேறு பொருட்களை அவற்றுள் போடுவது ஆகும். இரண்டாவது, மாதத்திற்கு ஒருமுறை வகுப்பில் உள்ள அனைத்துக் குழுக்களும் செய்தித்தாள்களைச் சேகரிக்கும் போட்டியை நடத்துவது ஆகும். போட்டியில் அதிகப் பொருள்களைச்

சேகரிக்கும் குழுவிற்குப் பரிசுகள் வழங்கலாம் என்றும் தீர்மானித்தோம். பரிசுகளை வகுப்பு ஆசிரியர் வழங்குவார் என்றும் தீர்மானித்தோம். இதற்கு எனது வகுப்பு ஆசிரியர் திருமதி மாலாவும் ஒத்துழைத்தார்.

முதலில் இந்த முயற்சிகள் பயன் அளிக்குமா என எனக்குத் தெரியவில்லை. ஏனென்றால், பல மாணவர்கள் நட்சத்திரங்கள் கிடைப்பதற்காக ஒத்துழைக்கிறார்கள். ஆனால், சிலர்தான் மறுபயனீட்டின் பலனை அறிந்து ஒத்துழைக்கிறார்கள். முதல் இரண்டு மாதங்கள் எல்லோரும் ஒத்துழைத்து வகுப்பாகச் செயல்பட்டனர். ஆனால், அதன் பின்னர் பெரும்பாலானோர் முயற்சிகளைக் கைவிட்டனர். இதைக் கண்டதும் என்ன செய்வது என்று தெரியாமல் தவித்தேன். அப்போது, எனது தோழி சாரா, "திவ்யா கவலைப்படாதே! ஒருவேளை நீ அவர்களிடம் மறுபயனீட்டின் பலன்களை எடுத்துரைத்தால் அவர்கள் மீண்டும் முயற்சி செய்வார்கள்" என்றாள். அவளது யோசனை எனக்கு மிகவும் பிடித்திருந்தது. நான் மறுநாளே, அவளது யோசனையைப் பின்பற்றி வகுப்பு மாணவர்களிடம் மறுபயனீட்டின் பயன்களைப் பற்றி எடுத்துரைத்தேன். மறுபயனீடு எப்படிச் செடிகளைக் காப்பாற்றுகிறது என்பதையும் மற்றும் எப்படி அது நமது அன்றாடச் செலவுகளைக் குறைக்கிறது என்பதையும் கூறினேன். இதைக் கேட்ட மாணவர்கள் உற்சாகமடைந்து மீண்டும் ஆவலுடன் தங்களது பணியை ஆற்றினர். இதைக் கண்ட நான் சூரியனைக் கண்ட தாமரைபோல் முகம் மலர்ந்தேன். வகுப்புத் தலைவராக நீ உனது பங்கை ஆற்ற வேண்டும் என்ற துடிப்பு உனது முகத்தில் தெரிகிறது. நீ கண்டிப்பாகச் சிறந்த தலைவராக வருவாய் என்பதில் எனக்கு எந்தச் சந்தேகமும் இல்லை என்றார் திருமதி மாலா. இதைக் கேட்டதும் நான் மகிழ்ச்சியடைந்தேன்.

இந்த அனுபவத்தின் மூலம் எனக்கு ஒன்று மட்டும் தெளிவாகப் புரிந்தது. ஒரு தலைவராக இருப்பது என்பது மற்றவர்கள் உனக்குச் சேவை செய்வது அல்ல என்றும், நீ மற்றவர்களுக்குச் சேவை செய்வது பற்றியது என்று தெரிந்துகொண்டேன். ஒரு தலைவராக இருப்பது கடினம் என்றாலும், எனது பணியை ஆற்ற நான் ஒரு போதும் தயங்கமாட்டேன் என்று எனக்குள் கூறிக்கொண்டேன். இந்த அனுபவம் எனது மனத்தில் பசுமரத்தாணிபோல் பதிந்தது.

**திவ்யா**

**உயர்தமிழ்**

**உயர்நிலை 3**

## வாழ்க்கையை மாற்றிய தொலைக்காட்சி நிகழ்ச்சி

ஐந்தாம் வகுப்பு வரை நான் மிகவும் சுட்டியாக இருப்பேன். நான் தினமும் படிப்பதில்லை. நான் நாள்தோறும் இணையத்தைத்தான் பார்த்துக்கொண்டிருப்பேன். நான் படிப்பதைப்பற்றி அதிகம் கவலைப்படமாட்டேன். ஐந்தாம் வகுப்பு ஆண்டிறுதித் தேர்வில் சில பாடங்களில் நான் தேர்ச்சிகூடப் பெறவில்லை. ஆனால், நான் அதைப்பற்றிக் கவலைப்படவும் இல்லை. என் பெற்றோர்கள் எவ்வளவு கூறியும் நான் கேட்கவில்லை. ஆனால், என்னுடைய குணம் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியைப் பார்க்க ஆரம்பித்தபிறகு மாறியது. அதன் பெயர் "மாணவர்களும் அவர்களுடைய வாழ்க்கையும்" என்பதாகும். அதிலிருந்து நான் நிறைய விஷயங்களைக் கற்றுக்கொண்டேன். முதலில், வாழ்க்கைக்கு கல்வி எவ்வளவு முக்கியம் என்பதை நான் கற்றுக்கொண்டேன்.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்கு

மாடல்ல மற்றையவை"

என்றார் நம் வள்ளுவர் பெருமான். கல்வி ஒன்றே அழிவற்ற செல்வமாகும். அதற்கொப்பான சிறந்த செல்வம் வேறு எதுவுமில்லை. அது வெள்ளத்தால் அழியாது வெந்தணலில் வேகாது, கள்வராலும் கவர முடியாது, கொடுத்தாலும் நிறையுமே தவிர குறையாது. அதற்கொப்பான சிறந்த செல்வம் வேறொன்றுமில்லை. கற்கையில் கல்வி கசப்பாக இருக்கும். கற்றுத்தெளிந்துவிட்டால் அதனால் கிடைக்கப்பெறும் இன்பத்தை அளவிடமுடியாது. உலகில் நிறைய மக்கள் கல்வி கற்க ஆசைப்பட்டாலும் அவர்களால் பயில முடியவில்லை. அதனால், கல்வியறிவைப் பெறுபவர்கள் அதன் அருமையை உணர்ந்து கற்க வேண்டும். இதை அந்நிகழ்ச்சியில் பங்குபெற்றவர் விளக்கிக் கூறியது எனக்கு நன்கு புரிந்தது. அது எனக்குச் சிறந்த அறிவுரையாகவும் அமைந்தது. அதைப் பற்றி நான் பலமுறை சிந்திக்க ஆரம்பித்தேன். அதன் விளைவாக நான் கொஞ்சம் கொஞ்சமாக மாற ஆரம்பித்தேன். பிறகு, மாணவர்களிடம் இருக்கவேண்டிய நல்ல பண்புகளைப் பற்றி அறிந்து அவற்றைக் கற்றுக்கொண்டேன். நல்ல மாணவர்கள் பள்ளிக்குத் தாமதமாகச் செல்ல மாட்டார்கள். அதோடு அவர்கள் ஆசிரியர்களிடம் பணிவன்புடன் பேசுவார்கள். அவர்கள் தாம் உண்டு தம் வேலை உண்டு என்று இருப்பதோடு அடுத்தவரின் பிரச்சனைகளில் மூக்கை நுழைக்கவும் மாட்டார்கள். பிறகு, தமக்குத் தெரியாததைக் கூச்சப்படாமல் ஆசிரியரிடமோ நன்றாகப் படிக்கும் மாணவர்களிடமோ கேட்பார்கள்.

"நல்லாரைக் காண்பதுவும் நன்றே – நலமிக்க

நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே"

நல்லார் குணங்கள் உரைப்பதுவும் நன்றே

அவரோடு இணங்கி இருப்பதுவும் நன்றே.

என்பதற்கேற்ப எனக்கு ஏன் நிறைய நண்பர்கள் இல்லை என்று தெள்ளத்தெளிவாகத் தெரிந்துகொண்டேன். முன்பு நான் எல்லோரிடமும் சண்டைக்குப் போவேன், அடுத்தவர்களின் பிரச்சினையில் மூக்கை நுழைப்பேன். ஆனால் இன்றோ, முடிந்தவரை நான் என்னை மாற்றிக்கொள்ள முயல்கிறேன்.

மூன்றாவதாக வாசிப்பு என்பது எவ்வளவு முக்கியம் என்பதையும் கற்றுக்கொண்டேன்.

“தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்கு

கற்றனைத் தூறும் அறிவு”

என்ற வள்ளுவரின் வாக்கிற்கேற்ப மண்ணைத் தோண்ட தோண்டத்தான் நீர் கிடைக்கும். அதைப்போலவே வாசிக்க வாசிக்கத்தான் அறிவு வளரும்.

“ கற்றவருக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு”

என்பதற்கேற்ப ஓர் அரசனையும் கற்றவனையும் பார்த்தால், அரசனுக்குத் தன் ஊரில் மட்டும்தான் சிறப்புண்டு. ஆனால், கற்றவருக்குச் செல்கிற இடமெல்லாம் சிறப்பு என்பதையும் அறிந்து கொண்டேன். நூல்கள் நம்முடைய வாழ்க்கைத்துணை. ஏனென்றால், நமக்கு ஏதாவது தெரிய வேண்டுமென்றால் நூல்கள் நமக்கு அறிவுள்ள நண்பர்களைப் போல் பதில் தரும். என்னைப்போன்ற மாணவர்கள் தத்தளிக்கும்போது பெற்றோர்கள்போல் உடனிருந்து உதவும். அதோடு நம்மைத் தவறான வழிக்குச் செல்லாமல் தடுக்கும். நம்முடைய மொழியாற்றலையும் சொல்லாற்றலையும் வளர்க்கும்.

அந்த நிகழ்ச்சியைப் பார்த்தபின் என்னுடைய குணம் முற்றும் மாறியது. நான் வீணாக இணையத்தளத்தைப் பார்க்காமல் செய்தித்தாள் படிக்க ஆரம்பித்துவிட்டேன். அதனால், நான் என் தேர்வுகளில் நன்றாகச் செய்ய ஆரம்பித்துவிட்டேன். நான் என் தொடக்கப்பள்ளி இறுதி ஆண்டுத் தேர்வில் தேர்ச்சி பெற்றேன். என் வாழ்க்கையே மாறியது. என் பெற்றோர் என்னைப் பார்த்துப் பெருமிதம் அடைந்தார்கள். என் வாழ்க்கை இப்படி மாறும் என்று கொஞ்சங்கூட நான் எதிர்பார்க்கவில்லை. அந்த நிகழ்ச்சிக்குத்தான் நான் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன்.

**ஹர்ஷிதா**

**உயர்தமிழ்**

**உயர்நிலை 3**

## முயற்சியே வெற்றிக்கு வழி

அன்று திங்கள்கிழமை, ஆர்வமாக எழுந்து குளியலறைக்குச் சென்று நீராடிவிட்டுப் பள்ளிக்குச் செல்வதற்குத் தயாரானேன். பின் பேருந்தின் மூலம் பள்ளியைச் சென்றடைந்தேன். நானும் மற்ற மாணவர்களும் தேசிய கீதம் பாடிய பின்பு, நான் என் மற்ற வகுப்பு மாணவர்களுடன் சேர்ந்து வகுப்பிற்குச் சென்றேன். சிறிது நேரத்தில் ஆசிரியரும் வகுப்பில் நுழைந்தார். அவர் வகுப்புத் தலைவராக ஒருவரை நியமிக்கப் போவதாகக் கூறினார். அதைக் கேட்க அனைவரும் ஆவலாக இருந்தனர். பின், அவர் என்னைத் தலைவராக நியமிக்கப் போவதாகக் கூறினார். அதைச் செவிசாய்த்தபின் என் ஆனந்தத்திற்கு அளவேயில்லை. ஏனெனில், நான் அதை எதிர்பார்க்கவே இல்லை. அத்துடன் நிறுத்திவிடாமல், ஆசிரியர் என் வகுப்பு ஓர் ஒப்படைப்பை வெற்றிகரமாகச் செய்து முடிக்க வேண்டும் என்றும் கூறினார். முக்கியமாக என்னை அந்த ஒப்படைப்பிற்குப் பொறுப்பேற்கச் சொன்னார்.

முதலில் நான் தயங்கினேன். அதற்குக் காரணம், ஒரு பெரிய பொறுப்பு என்னிடம் ஒப்படைக்கப்பட்டது என்பதேயாகும். என்னால் முடியும் என்ற தன்னம்பிக்கையை எனக்குள் உண்டாக்கினேன். பிறகு, அன்று பள்ளி முடிந்தபின் நான் உடனடியாகத் தாமதிக்காமல் எந்த வகையான ஒப்படைப்பைத் தேர்ந்தெடுப்பது, என ஆழ்ந்து சிந்தித்தேன். திடீரென்று, என் மனத்தில் என் வகுப்பு மாணவர்களைப் மறுபயனீட்டு முயற்சிகளில் ஈடுபடுத்தலாம் என்ற யோசனை வந்தது. மறுநாள் பள்ளிக்குச் சென்றதும் என் வகுப்பு மாணவர்களிடம் நான் தேர்ந்தெடுத்த ஒப்படைப்பைப் பற்றி விளக்கிக் கலந்துரையாடினேன். அந்த ஒப்படைப்பைப் பற்றி யாருக்கும் கருத்து வேறுபாடு இல்லாததால் நான் உடனடியாக அந்த ஒப்படைப்பைச் செய்வதற்காகப் மறுமயனீடு பற்றிப் பல தகவல்களை மும்முரமாகச் சேகரிக்க ஆரம்பித்தேன். முதலில் என் வகுப்பை ஐந்து குழுக்களாகப் பிரித்தேன்.

பின் ஒவ்வொரு குழுவுக்கும் தம்மால் இயன்றவரை பல்வேறு தகவல்களைச் சேகரித்துத் தருமாறு சொன்னேன். அவ்வாறு செய்வதால் ஒவ்வொருவருடைய வேலையையும் சுலபப்படுத்துவதோடு சேகரித்த தகவல்களை ஒருவர் மற்றவரோடு பகிர்ந்து கொள்ளலாம். அதன் மூலம் மற்றவர்கள் பயனுள்ள தகவல்களை அறிந்துகொள்வார்கள். இதற்கிடையில் நான் என் நண்பர்களை ஊக்குவித்துக்கொண்டே இருந்தேன். “முயற்சில்லாத ஆசையால் பயனில்லை” ‘ஆசையில்லாத முயற்சியால் பயனில்லை’ என்று பற்பல கருத்துகளைச் சொல்லி அவர்களை ஊக்குவித்தேன். நான் கலந்துகொள்ளவிருக்கும் தமிழ் பேச்சுப் போட்டியும் நெருங்கிக்கொண்டே வந்தது. நான் என் நேரத்தைச் சமாளிக்கக் கடுமையாகச் சிரமபட்டேன். இருந்தாலும் அந்த மறுபயனீட்டு முயற்சியில் எப்படியாவது வெற்றி காண வேண்டும் என்ற வைராக்கியத்தால் நான் தினமும் அரும்பாடுபட்டுச் சிறிது நேரத்தை இந்தப் போட்டிக்காக ஒதுக்கினேன். ஏனெனில் அந்த ஒப்படைப்பை இன்னும் வாரத்திற்குள் முடிக்க வேண்டும். நானும் என் வகுப்பு மாணவர்களும் சேர்ந்து மறுபயனீட்டுப் பொருள்களை வைத்துச் சில வகையான பொம்மை வீடுகள் கண்ணைக் கவரும் ஆபரணங்கள் போன்ற பல விதமான பொருட்களைச் செய்ய ஆரம்பித்தோம். சுரியாக இரண்டு நாட்களுக்கு முன்பே ஒருவழியாகச் சிரமப்பட்டு அந்த ஒப்படைப்பை முடித்தது, எனக்கு நிம்மதியாக இருந்தது. பின் நான் கலந்துகொள்ளவிருக்கும் தமிழ் பேச்சுப் போட்டியில் கலந்துகொண்டு நன்றாகப் பேசினேன். அதன்பின் என் பாரம் அனைத்தும் மாயமாக மறைந்துவிட்டது. ஒரு மாதத்திற்குப் பிறகு

ஆசிரியர், நானும் என் வகுப்பு மாணவர்களும் நன்றாகச் செய்ததைப் பெருமையுடன் கூறினார். மேலும் அதை அவர் ஒரு போட்டிக்கு அனுப்பியதாகவும் எங்கள் பள்ளி முதலிடத்தை பிடித்ததாகவும் கூறினார் உடனே என் நண்பர்கள் எல்லோரும் மகிழ்ச்சியில் துள்ளிக்குதித்தனர். அன்று என் மனம் குளிர்ந்ததோடு மனநிறைவும் பெற்றது. அதோடு "முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்" என நம் முன்னோர்கள் கூறியதுபோல நாம் அயராது உழைத்தால்தான் வெற்றி நம்மைத் தேடிவரும் என்ற கருத்தை நான் கற்றுக்கொண்டேன்.

**அஃப்ரின்**

**உயர்தமிழ்**

**உயர்நிலை 3**

## விலங்கு நலப் பாதுகாப்பு

நம் நாடு சிறியதாக இருந்தாலும் வீடுகளில் பல விலங்குகள் வளர்க்கப்படுகின்றன. ஆனால் பல விலங்குகள் முதலாளிகளால் துன்புறுத்தப்படுகின்றன. மேலும் அவை வயதானதும் சாலையோரங்களில் விடப்படுவதால் ஆதரவற்று நிற்கின்றன. விலங்குகளைத் துன்புறுத்துவதைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்குப் பல சங்கங்கள் செயல்படுகின்றன. இருப்பினும் பலர் இன்னும் விலங்குகளைத் துன்புறுத்திக் கொண்டே இருக்கிறார்கள். இவை அனைத்திற்கும் ஒரு முடிவு கட்ட வேண்டும். விலங்குகளைத் துன்புறுத்துபவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும்.

மனிதர்களுக்குரிய மதிப்பையும் மரியாதையையும் விலங்குகளிடமும் காட்ட வேண்டும். அப்போதுதான், விலங்குகளுக்கு இந்தச் சமுதாயம் ஓர் பாதுகாப்பான இடமாக விளங்கும். வாயில்லா ஜீவன்களை நாம் பேணிக்காக்க வேண்டும். மனிதர்களைப் போன்று விலங்குகளுக்கும் இன்பங்களும் துன்பங்களும் உள்ளன. மனிதர்களைப் போன்று பல குணங்கள் இவ்விலங்குகளுக்கும் இருக்கின்றன.

ஆனால் இச்சமுதாயம் மனிதர்களுக்கு ஆறறிவு இருப்பதாகவும் மிருகங்களுக்கு ஐந்தறிவு மட்டுமே இருப்பதாகவும் வேறுபாடுகளை வைத்திருப்பதால் விலங்குகளைத் தாழ்த்தி வைக்கிறது. இது மெய்யாக இருந்தலும் விலங்குகளைத் துன்புறுத்தல் கூடாது.

விலங்குகளைத் துன்புறுத்துவோருக்கு இரண்டு ஆண்டு சிறைத் தண்டனை வழங்கப்பட வேண்டும். விலங்கு நலப் பாதுகாப்பை உறுதிசெய்வதற்கெனப் பல அமைப்புகள் செயல்படுகின்றன. அவை இவ்விலங்குகளை அரவணைத்து அவை தங்குவதற்கான இடத்தை உருவாக்கி, நலத்துடன் பார்த்துக்கொள்கின்றன. அந்த அமைப்புகளிடமிருந்து நம் விலங்குகளை வாங்கி வளர்க்கவும் முடியும்.

அந்த விலங்குகளை வாங்குபவர்கள், வாங்கிய விலங்குகளை நன்கு பார்த்துக் கொள்வார்கள் என்பதை அவ்வமைப்புகள் உறுதி செய்யும். அதற்காக அவர்களின் வீட்டைச் சோதித்துப் பார்த்த பிறகே அவ்வமைப்புகள் பிராணியை ஒப்படைக்கும்.

சில சமயங்களில் விலங்குகளை வளர்ப்போர் பல நாட்களுக்கு வெளியூர்ப் பயணம் மேற்கொள்ளவேண்டியிருந்ததால் அந்த அமைப்புகளிடம் ஒப்படைத்துவிட்டுச் செல்லலாம். அதற்குப் பதிலாகப் பிராணியைச் சாலை ஓரங்களில் விட்டுவிட்டுச் செல்வது தவறாகும்.

விலங்கை வளர்ப்போர் ஆரம்பத்தில் எப்படிப் பழகுகிறாரோ அதைக் கொண்டுதான் அப்பிராணியும் அவருடன் பழகும். “முதல் கோணல் முற்றும் கோணல்” என்ற பழமொழிக்கேற்ப வளர்ப்பு பிராணியைத் துன்புறுத்தினால், பிராணி நம்மிடமிருந்து விலகிச் செல்லும்.

ஆகவே, நம் நாட்டில் உள்ள விலங்குகளைத் துன்புறுத்தாமல் பேணிக் காப்பது நம் கடமையாகும்.

**வைஷ்ணவி செல்வகாசி**

**உயர்தமிழ்**

**உயர்நிலை 3**